# தேவத்துவத்தின் இரகசியம் திரைநீக்கப்படுதல்

A presentation by:

**Ptr. RONNIE MILLEVO**

ஆக்கியோன் : பாஸ்டர். ரோனி மில்லவோ

தமிழாக்கம் : பாஸ்டர். A. சாமுவேல்

# திரித்துவ போதனை

## ஒரே தேவனில் மூன்று ஆட்கள் இருக்கிறார்கள்

*அவர்கள் பரலோகத்தில் மூன்று சிங்காசனங்களில் வீற்றிருந்து தெய்வீக தன்மையைச் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள்*




<u>இந்த போதனையின் முரண்பாடு:</u>

<u>மூன்று ஆட்கள் = மூன்று கடவுள்கள்</u>

# ஸ்தாபனங்களின் நம்பிக்கை - எண் 2

## ஒருத்துவக்காரர்களின் போதனை

## மாம்சத்திலுள்ள இயேசுதான் மூன்றுபேருமாயிருக்கிறார்




<u>இந்த போதனையின் முரண்பாடு</u> : இயேசுவே பிதாவாக இருப்பாரென்றால் ஏன் பிதாவோடு பேசவேண்டும்?

## ஸ்தாபனங்களின் நம்பிக்கை - எண் 3

# இருத்துவக்காரர்களின் போதனை

## நித்திய பிதா மற்றும் நித்திய குமாரன்




இந்த போதனையின் முரண்பாடு : குமாரன் என்றால் அவருக்கு ஒரு பிறப்பு என்று ஒன்றுண்டு. குமாரத்துவம் என்ற வார்த்தையானது ஒரு துவக்கம் ஒன்றுண்டு என்பதை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.

# கேள்வி என்னவெனில்

- .... நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?
- ...எந்த போதனையை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்?
- .... தேவத்துவத்தைப் பற்றிய இந்த எல்லா ஸ்தாபன வியாக்கியானங்களிலிருந்து நீங்கள் எப்படி வித்தியாசமானவர்கள்?
- ..... தேவத்துவத்தை உண்மையாக, சரியாகப் புரிந்துகொள்ள முடியுமா?
- பதில் என்னவெனில் "ஆம்!" புரிந்துகொள்ள முடியும்!!!!

நாம் இந்த இரண்டு வேதவாக்கியங்களைக் கவனிப்போம்

**யோவான் 1:1,14**

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்."

*ஆதியாகமம் 1:1*


***"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"***

ஆதியாகமம் 1:1 மற்றும் யோவான் 1:1 என்ற வசனங்களிலுள்ள "ஆதியிலே" என்ற வார்த்தை காலத்தின் துவக்கமாகும்.

காலம் என்பதற்கு முன் நித்தியம் இருந்தது. ஆகவே நித்தியத்திலிருந்து உண்மையாகவே என்ன நடந்தது என்பதை அறிவோம்.

காலம் என்பது துவங்கும்முன் தேவன்
"ஏலோகிம்" ஆக இருந்தார்

# "ஏலோகிம்"



அவர் மகத்தான நித்திய
ஆவியாயிருக்கிறார்
அவர் இருக்கிறவராகவே இருக்கிறா
அவர் தம்மில்தாமே ஜீவிக்கிறவராக
இருக்கிறார்
அவர் **"யாவே"** என்றும் அறியப்படுகிற

## ஏலோகிமின் பண்புகள்

**நித்தியமானவர்** (துவக்கமும், முடிவும் இல்லாதவர்)
**சர்வவல்லவர்** (எல்லா வல்லமையுமுடையவர்)
**எல்லாமறிந்தவர்** (எல்லாவற்றையும் அறிந்தவர்)
**சர்வ வியாபகர்** (எல்லா இடத்திலும் இருக்க கூடியவர்)
**இராஜாதிபத்தியமுள்ளவர்** (ஒருவருக்கும் கட்டுப்பட்டவர் அல்ல)
**முடிவில்லாதவர்** (அவருக்கு எல்லை என்பது இல்லை)

## தேவனாகிய ஏலோகிமைக்குறித்து
## வேதாகமம் என்ன சொல்கிறதென்றால் :

ஏசாயா 43:10,11
நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை.
நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.

ஏசாயா 45:21
நீங்கள் தெரிவிக்கும்படி சேர்ந்து, ஏகமாய் யோசனைபண்ணுங்கள்; இதைப் பூர்வகாலமுதற்கொண்டு விளங்கப்பண்ணி, அந்நாள்துவக்கி இதை அறிவித்தவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவோ? நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை.

சங்கீதம் 86:10
தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்; நீர் ஒருவரே தேவன்.

ஏசாயா 37:16
சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்.

யாத்திராகமம் 20:2,3
உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.
என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

ஏலோகிம் தமது நித்திய சிந்தைகளையும், தன்மைகளையும் வெளிப்படுத்த விரும்பினார் . . .

தேவன் : அவர் தேவனாக வேண்டுமென்றிருந்தார்
தேவன் என்றால் ஆராதிக்கப்படுகிறவர்.
அவர் ஆராதிக்கப்படவேண்டுமென்று விரும்பினார். ஆகவே முதலாவதாக தூதர்களைச் சிருஷ்டித்தார்.

பிதா : அவர் தமக்குக் குமாரர்களையும், குமாரத்திகளையும் உடையவராயிருக்க விரும்பினார். ஆகவே ஆதாமையும்,ஏவாளையும், உங்களையும், என்னையும் உண்டாக்கினார்.

சுகமளிப்பவர் : அவர் சுகமளிப்பவராக தம்மை வெளிப்படுத்த வேண்டுமென்றால் சுகவீனம் இருக்க வேண்டும். வியாதி, தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தின் ஒரு பங்காகும்.

இரட்சகர் : அவர் இரட்சிக்க வேண்டுமென்றால் விழுந்துபோன சிருஷ்டிபுக்கள் இருக்க வேண்டும்.


மீட்பர் : அவர் மீட்கவேண்டுமென்றால், முன்னதாக அவைகள் அவருக்குச் சொந்தமாயிருக்க வேண்டும்.

நியாதிபதி : அவர் நியாயந்தீர்க்க வேண்டுமென்றால் நீதிமான்களும், துன்மார்க்களும் இருக்க வேண்டும்.

ராஜா : அவர் ஆளுகை செய்ய, அவரது ஆளுகைக்குட்பட்ட இராஜியங்கள் இருக்க வேண்டும்.

ஆசாரியர் : அவர் நம்முடைய பெலவீனங்களைக் குறித்து நமக்காக பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.

தேவன் தம்முடைய தன்மைகளை (சிந்தைகளை)
வெளிப்படுத்த அவருக்கு ஒரு சரீரம் தேவையாயிருந்தது...



பின்பு தேவனிடத்திலிருந்து "லோகாஸ்" என்னும் வார்த்தை புறப்பட்டது..

*யோவான் 1:1-3,14*

*ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*
*அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.*
*சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.*
*அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*



*ஆதியிலே வார்த்தை (லோகாஸ்) இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்.*



'லோகாஸ்' (Logos) என்னும் கிரேக்க பதம் 'வார்த்தை' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இப்பதத்தை 'சிந்தனை' அல்லது 'பேச்சு' என்று இருவகையாக அர்த்தங்கொள்ளலாம். வார்த்தை சிந்தனையை வெளிப்படுத்தும். தேவனுடைய சிந்தனை இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டது என்று யோவான் கூறுகிறான்.

"லோகாஸ்" இது தேவனின் தெய்வீக தோற்றம். அதரிசனமான தேவனின் சொரூபம்.

*"லோகாஸ்" இது தேவனின் ஆவிக்குரிய சரீரம்.*

"லோகாஸ்" தான்
குமாரனின்
முந்திய உருவம்

இந்த "லோகாஸ்"
தான்
கிறிஸ்து

இந்த "லோகாஸ்" தான்
எல்லாவற்றையும்
சிருஷ்டித்தவர்...




ஆதியாகமம் 1:1
ஆதியிலே தேவன்
வானத்தையும் பூமியையும்
சிருஷ்டித்தார்.

கொலோசேயர் 1:15-17
அவர் அதரிசனமான தேவனுடைய
தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும்
முந்தின பேறுமானவர்.
ஏனென்றால் அவருக்குள் சகலமும்
சிருஷ்டிக்கப்பட்டது;
பரலலோகத்திலுள்ளவைகளும்
பூலலோகத்திலுள்ளவைகளுமாகிய
காணப்படுகிறவைகளும்
காணப்படாதவைகளுமான சகல
வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும்,
கர்த்தத்துவங்களானாலும்,
அதிகாரங்களானாலும், சகலமும்
அவரைக்கொண்டும், அவருக்கென்றும்
சிருஷ்டிக்கப்பட்டது.
அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்,
எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

கொலோசேயர் 2:9
ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக
அவருக்குள் வாசமாயிருக்கிறது.

ஜீவன் 57-0602

"ஜீவிக்கிற" பிதாவினிடத்திலிருந்து லோகாஸ் புறப்பட்டது. அது குமாரன். அது ஆவியின் சரீரம். அது மகத்தான தேவனின் வானத்திற்குரிய சரீரம். அது தேவன் வார்த்தையானார் என்பதாகும். பின்பு அந்த ஆவியின் சரீரம் இயேசு கிறிஸ்து என்னும் மனிதனில் மாம்சமானது. அப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்ற தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருந்தது."





எபிரெயர் அத்தியாயம் 1 57-0821

இந்த மகத்தான ஜீவ ஊற்றானவருக்குத் துவக்கமும், முடிவும் இல்லை. இந்த மகத்தான ஆவியினிடத்தினின்று "லோகாஸ்" வெளிப்பட்டது. அது ஆவியாயிருக்கிற தேவனின் காணக்கூடிய ஒரே தோற்றம். இது மனிதனைப்போல் தோற்றமளிக்கும் தேவனுடைய ஆவியின் சரீரம்.

எபிரெயர் அத்தியாயம் 2 பாகம் 3 57-0828

"இந்த சரீரத்தின் வடிவத்தைதான் வேதபண்டிதர்கள் தேவனிடத்திலிருந்து புறப்பட்ட "லோகாஸ்" என்று அழைக்கின்றனர். இந்தப் பதத்தின் சரியான பொருள் ஆவிக்குரிய சரீரம் (Theophany) என்பதாகும். இது மகிமையின் சரீரமல்ல. மகிமையடைந்த மனித சரீரம் போன்ற தோற்றத்தை உடைய ஒரு சரீரம். இந்தச் சரீரம் புசிப்பதும் இல்லை, குடிப்பதும் இல்லை. நாம் மரிக்கும் போது, மாமிச சரீரத்திலிருந்து, நமக்காக காத்துக் கொண்டிருக்கிற ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசிக்கிறோம். இவ்விதமான ஒரு சரீரம் தான் தேவனுக்கு இருந்தது. ஆகவே அவர் "நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொன்னார்."



# தேவன் மனுஷனை முதலாவதாக - ஆவியின் சரீரத்தில் சிருஷ்டித்தார் (THEOPHANY)




- ஆதியாகமம் 1:26,27
- பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.
- தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

# பின்பு தேவன் மனுஷனுக்கு - ஒரு மாமிச சரீரத்தை உண்டாக்கினார்



- ஆதியாகமம் 2:7
- தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்

# மனுஷன் கீழ்படியாமையினால் விழுந்துபோனான்




*ஆதியாகமம் 3:13-17*


*அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.*

*அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;*
*உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.*

*அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.*

*பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்...*

# மனுஷன், ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்தப்பட்டான்





ஆதியாகமம் 3:24

அவர் மனுஷனைத்
துரத்திவிட்டு,
ஜீவவிருட்சத்துக்குப் போம்
வழியைக் காவல்செய்ய
ஏதேன் தோட்டத்துக்குக்
கிழக்கே கேருபீன்களையும்,
வீசிக்கொண்டிருக்கிற
சுடரொளி பட்டயத்தையும்
வைத்தார்.

# இரத்தத்தினால் மீட்பு உண்டானது



எபிரெயர் 9:22

நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

லேவியராகமம் 4:24,25

அந்தக் கடாவின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைக் கொல்லக்கடவன்; இது பாவநிவாரணபலி.

அப்பபொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,.

# தேவனின் தோற்றங்கள்

## 1. மெல்கிசேதேக்கு






*எபிரெயர் 7:1-3*

இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான
தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த
ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.
இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்;
இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின்
ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின்
ராஜா என்றும் அருத்தமாம்.
இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன்
நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல்,
தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும்
ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

"சாலேமின் ராஜாவும், உன்னதமானவருடைய ஆசாரியரும், சமாதானத்தின் ராஜாவுமாகிய இந்த மெல்கிசேதேக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முந்தைய தோற்றமேயல்லாமல் வேறொரு நபர் அல்ல. இவர் ஆபிரகாமைச் சந்தித்தபோது அவனுக்கு அப்பமும், திராட்சரசமும் (இராபோஜனம்) கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். இந்த ஆசாரியர் யார்? மாம்சத்தில் அவதாரம் எடுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவேயல்லாமல் வேறுயாருமல்ல. "

(மகத்தான பிரபு மெல்கிசேதேக்கு 55-0109M)

# மெல்கிசேதேக்கு = வெளிப்படுத்தப்பட்ட மாமிசம்

கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்

*இயேசு பழைய ஏற்பாட்டில் மெல்கிசேதேக்கு என்பவராக ஆவியின் சரீரத்தில் (Theophany)*
*வெளிப்பட்டபோது - மெல்கிசேதேக்கு என்பது ஒரு ஆசாரியத்துவம் அல்ல.*

*அது ஒரு ஆள். பாருங்கள், இவர் (இயேசு) அப்பொழுது பிறக்கவில்லை.*

*அவர் ஆவியின் சரீரத்தில் இருந்தார்.*

*அவருக்குத் தகப்பனும் தாயும் கிடையாது. எனவே அவர் தேவன்.*
*அவர் சாலேமின் ராஜா என்னும் மனித உருவில் வெளிப்பட்டார்.*

*சாலேமின் ராஜா என்பதற்கு 'சமாதானத்தின் ராஜா' என்றும்,*
*மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும் பொருள்.*


*பாருங்கள்? அவர்தான் மெல்கிசேதேக்கு அவருக்கு நாட்களின்*
*துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லை.*

*அது ஆவியின் சரிரத்தில் மனிதனாகத் தோன்றிய இயேசு.*

# தேவனுடைய மற்ற பிரதிநிதித்துவங்கள்.



# ஏசாயா 9:6 மற்றும் 7:14 தீர்க்கதரிசன வசனங்கள்





*ஏசாயா 9:6*

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.

*ஏசாயா 7:14*

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

# மரியாள் பரிசுத்த குழந்தையைச் சுமந்து அதைப் பிரசவிக்கும் கருவியாக மாத்திரம் அமைந்திருந்தாள்

லூக்கா 1:30,31
தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்.
இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.



THE ANGEL'S MESSAGE TO MARY

"இயேசு தோன்றுவதற்கென மரியாளை ஒரு கருவியாக மாத்திரம் உபயோகித்தார். ஆனால் அந்தப் பிள்ளை தேவனுக்கே சொந்தமானது. ஆம். அவர் முட்டை, ஹிமோக்ளோபின் இவ்விரண்டையும் சிருஷ்டித்தார். ஹிமோக்ளோபின் ஆண் இனத்திலிருந்து மாத்திரமே வரமுடியும். அவர் அதை சிருஷ்டித்தார். மரியாள் எவ்வித பாலுணர்ச்சியுமின்றி இந்தக் குழந்தையைக் கருத்தரித்தாள். பரிசுத்த ஆவி அவளை நிழலிட்டு, அவளுடைய கர்ப்பத்தில் இந்த இரத்த அணுவையும், முட்டையையும் சிருஷ்டித்து, கிறிஸ்து இயேசு என்னும் மனிதனைத் தோன்றச் செய்ததேயன்றி வேறல்ல."

யேகோவா-யீரே இரண்டாம் பாகம் 62-0706

"அந்த மகத்தான சிருஷ்டி கர்த்தர் என் இரட்சகராக மாறினார். பரிசுத்த ஆவியானவர் மரியாளை நிழலிட்டபோது அவர் அவளுடைய கர்ப்பத்தில் ஒரு அணுவைச் சிருஷ்டித்து, அது விருத்தியாகி
நம்முடைய கர்த்தரின் சரீரமாயிற்று. அந்தக் கூடாரத்தில் அவர் வாசமாயிருந்தார். இது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! யேகோவா தேவன் சாணத்தின் மேலும், வைகோலின் மேலும் குழந்தையாகப் பிறந்திருக்கிறார். இதுவே, ஒரு நித்திய அடையாளம்."

*(சிமர்னா சபையின் காலம் 60-1206*





*"அது பூதனுடைய இரத்தமுமல்ல, புறஜாதியானுடைய இரத்தமுமல்ல. அது தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு இரத்த அணு. அந்த இரத்தத்தின் மூலமாக அவர் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி
செய்கிற கிருபாதார பலியானார். அந்த இரத்தம் விசுவாசியைப் பாவங்களற முற்றிலும் கழுவிச் சுத்திகரித்து அவனை ஒருபோதும் பாவஞ்செய்யாதவனைப் போல மாற்றுகிறது. தேவன் நமது பாவங்களை மறதிக் கடலில் போட்டு விட்டார்."*

*(இயேசுவைக் காட்சியில் அழைத்தல் 63-0804 Eve)*

# இயேசு மானிட சரீரம், ஆத்துமா, ஆவி என்ற அம்சங்களையுடைய மனிதர்,



1 தீமோ 3:16
அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்...

"பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பதைப்போல மனிதன் மூன்று அம்சங்கள் ஒருங்கிணைந்த ஜீவனாயிருக்கிறான்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பது இயேசு கிறிஸ்து என்ற ஒரு நபரின் மூன்று பட்டப்பெயர்களாகயிருக்கிறது.

நீங்கள் ஆத்துமா, ஆவி, சரீரம் என்ற மூன்று அம்சங்களைக்கொண்ட ஒரு மனிதனாயிருக்கிறீர்கள். இவைகளில் ஒன்று குறைவுபட்டாலும் அது மனிதனாக இருக்க முடியாது.
நீங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று அறைகளைக் கொண்ட கூடாரத்தில் வாசம்பண்ணுகிறீர்கள்.
அவ்விதமாகவே தேவனும் ஆத்துமா, ஆவி, சரீரம் என்ற மூன்று அம்சங்களைக்கொண்ட இயேசு கிறிஸ்து என்ற கூடாரத்தில் வாசம் செய்தார். (உன்திரை 56-0121)

# தேவனுடைய ஆவியின் சரீரம் (*theophany*), மாம்சமானது




*ஜீவன் -57-0602*

"பின்பு அந்த ஆவியின் சரீரம் இயேசு கிறிஸ்து என்ற நபரில் மாம்சமானது. அப்பொழுது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனப்படுகிற தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிற்று"


*கல்லறையிலிடுதல் 57-0402*

"ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம். முழு தேவத்துவமும் அவருக்குள் இருந்தது. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாய் ஒரு மானிட ரூபத்துக்குள் வாசம் பண்ணினார். தேவனுடைய ஆவிக்குரிய சரீரம், அவர் தேவனுடைய மகத்தான சாயலில் மனிதனை உருவாக்கி, அதன் பின்னர் அவனை பூமியில் வைத்தார். அவருக்கு ஒரு சரீரம் இருந்தது. தேவன் ஒரு சரீரமில்லாதவராயிருக்கவில்லை. தேவன் ஒரு சரீரத்தை உடையவராயிருக்கிறார். அது மனிதனைப் போன்றேகாணப்படுகிறது."

*யார் இந்த மெல்கிசேதேக்கு 65-0221 E*

*"நீ சோதனையை எதிர்த்து நிற்க ஆவிக்குரிய சரீரத்தின் வழியாக வராமல் வேறு வழியாய் மாம்சத்தில் வரவேண்டியதாய் இருந்தது." (4 விதமான சரீரங்கள் : மாமிச சரீரம், ஆவியின் சரீரம், வானத்துக்குரிய சரீரம், மகிமையின் சரீரம்)*

# தேவன் மானிடனாக மாறினார்



(பிதாவை எங்களுக்குக் காண்பியும் 60-0731)

தேவன் ஆவியாயிருக்கிறார். அவர் இயேசுவாக மாறும் வரைக்கும் அவருக்குப் பாதங்களோ, கரங்களோ, கால்களோ, இப்படியாக.... ஒன்றுமில்லை. சாணத்தால் நிறைந்த மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

சிறிய யேகோவா முன்னனையில் கிடத்தப்பட்டு அழுகின்றார். சிறிய யேகோவா பையனைப்போல உழைக்கின்றார். அவர் நம்மிடம் கடந்து வந்து நம்மைப்போல் மனித ஜாதியானார். தேவன் மனிதனாக மாறினார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு தேவனை பூமியில் மனிதனாக்கியது. அவர் ஒரு இளைஞனுடைய தன்மையுடன் உழைத்து, வேலை செய்தார். நாம் சோதனைகளிடையே கடந்துபோவதுபோல அவரும் நம்மைப்போல ஒவ்வொரு சோதனையையும் கடந்து சென்றார். அவர் தம்முடைய சொந்த நீதியான நியாயத்தீர்ப்பைத் தாமே நிறைவேற்ற அப்படிச் செய்ய வேண்டியதாயிற்று.


# தேவன் மானிடனாக மாறினார்

யோவான் 8:56-59
உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.
அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.
அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.

யோவான் 10:30-33
நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார்.
யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ்சொலுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோ என்றார்கள்.

யோவான் 14:8,9
பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?

# மூன்று சாஸ்திரிகள் குழந்தையைத் தொழுது கொண்டனர்




*மத்தேயு 2:11*

*அவர்கள் அந்த வீட்டுக்குள்பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.*

**பொன்:** கிறிஸ்துவின் தெய்வீகத்தையும், இராஜரீகத்தையும் குறிக்கும். **வெள்ளைப்போளம்:** என்பது ஒரு கசப்பான மூலிகை. வெள்ளைப்போளம் கிறிஸ்துவின் மேலான பலியாகிய அவரது மரணத்தை அடையாளப்படுத்துகிறது. "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." (ஏசாயா 53:5). **தூபவர்க்கம்:** என்பது சுகந்த வாசனையுடைய ஒரு வாசனைப் பொருள். தூபவர்க்கம் கிறிஸ்துவின் பரிசுத்த ஆசாரிய ஊழியத்தைக் குறிக்கும்.

# 12 வயது நிரம்பிய சிறுவன் இயேசு



லூக்கா 2:40

" பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது. "

"அவர் பன்னிரெண்டு வயது சிறுவனாக இருந்தபோது பிதாவானவர் அவருக்குள் பரிபூரணமாக வாசம் செய்யவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்ற, அந்நாளில் தேவனுடைய ஆவி அவர்மேல் வந்திறங்கி அவருக்குள் பரிபூரணமாக வாசம் செய்தார்."

நம்பமுடியாது; ஆனாலும் உண்மை 64-0206B

# யோர்தான் நதியில் ஞானஸ்நானம்



யோவான் 1:32-34

பின்னும் யோவான் சாட்சியாகச்
சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல
வானத்திலிருந்திறங்கி, இவர்மேல்
தங்கினதைக் கண்டேன்.
நானும் இவரை அறியாதிருந்தேன்;
ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்
கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்:
ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை
நீ காண்பாயோ, அவரே பரிசுத்த
ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர்
என்று எனக்குச் சொல்லியிருந்தார்.
அந்தப்படியே நான் கண்டு, இவரே
தேவனுடைய குமாரன் என்று சாட்சி
கொடுத்துவருகிறேன் என்றான்.

*The Sacrifice must be washed*

# யோர்தான் நதியில் ஞானஸ்நானம்




அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா

*அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா*
*சத்துருவின் வாசலைச் சுதந்தரித்துக் கொள்ளுதல் 59-1108*

"அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், யோவானால் ஞானஸ்நானம் பெறும் போது பரிசுத்த ஆவி அவர்மேல் வந்தது. அப்பொழுது அவர் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக மாறினார். இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள் அவர் பிறக்கும் போது தேவனுடைய குமாரனாயிருந்தார். அவர் கன்னிப் பிறப்பின் மூலமாக வந்த தேவனுடைய குமாரன். ஆனால் அவர்மேல் பரிசுத்த ஆவி வந்தபோது அவர் மேசியாவாக ஆனார். ஏனெனில் 'மேசியா" என்பதின் அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" பாருங்கள் அவர்மேல் பரிசுத்த ஆவி வந்தபின்பு அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருந்தார்."

## 30 வயதின் முக்கியத்துவம்


யோசேப்பு பார்வோனால் எகிப்தின் அதிபதியாக நியமிக்கப்பட்டபோது 30 வயதாயிருந்தான். தாவீது ராஜாவாக ஏற்படுத்தப்பட்டபோது 30 வயதாயிருந்தான். அப்படியே 30 வயதில் தான் ஆசாரியர்களும் லேவியர்களும் ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார்கள்.

# இயேசு தமது மூன்று விதமான ஊழியத்தை நடப்பிக்கிறார்.

**நாற்பது நாட்கள் உபவாசம் செய்த பின்பு, இயேசு மூன்று முறை பிசாசினால் சோதிக்கப்பட்டார். அப்பத்திற்காக, பெருமைக்காக, இயேசு புகழ்ச்சிக்காகவும், மகிமைக்காகவும் ஊழியஞ்செய்வதற்காக



- முதலாம் இழுப்பு – *சுகமளித்தலும், அற்புதங்களும்*
- இரண்டாம் இழுப்பு – *தீர்க்கதரிசனம் உரைத்தலும், ஆவியைப் பகுத்தறிதலும்*
- மூன்றாம் இழுப்பு – *வார்த்தையை வெளிப்படுத்துதல்*




# நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

**மனிதராகவும், தேவனாகவும் இருக்கிறார்**

| மனிதர் | தேவன் |
|---|---|
| • பிசாசினால் சோதிக்கப்பட்டார் (மத்தேயு 4:4) | • வார்த்தையினால் ஜெயித்தார். |
| • ஆகாரத்திற்காக பசியாயிருந்தார் (மாற்கு 11:12) | • 5000 பேர்களைப் போஷித்தார் |
| • களைப்படைந்தார் (மாற்கு 4:38) | • அவரே ஜீவ அப்பம் (யோவான் 6:10) |
| • கண்ணீர் விட்டார் (யோவான் 11:35) | • காற்றையும், கடலையும் அதட்டினார் (மாற்கு 4:39) |
| • மரித்தார் (மாற்கு 15:37) | • மரித்தவனை உயிரோடு எழுப்பினார் (லாசரு) |
| • 50 வயது ஆகவில்லை. ஆனாலும் ஆபிரகாமைக் கண்டார். | • உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:6) |
| | • "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இருக்கிறேன்" "வனாந்திரத்திலுள்ள அந்த கன்மலை நானே" என்று சொன்னார். "ஜீவ அப்பம் நானே" |

# மறுருபமலையில் இயேசு

மத்தேயு 17:1-5



ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும்
யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய
யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி
உயர்ந்த மலையின்மேல் போய்,
அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம்
சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம்
வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.
அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே
பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.
அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே,
நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால்,
இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு
கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று
கூடாரங்களைப் போடுவோம் என்றான்.
அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம்
அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச
குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச்
செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம்
உண்டாயிற்று.

புத்திரசுவீகாரத்தின் நேரம்

# கெத்செமனே தோட்டத்தில் இயேசு



**மாற்கு 14:32-36**

*வெளிப்படுத்தப்பட்ட தேவபுத்திரர்கள் 60-0518*

"ஏலி, ஏலி : என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கடைசியாகக் கூப்பிட்டார். அது அவர் மனிதர் என்று விளங்கப்பண்ணுகிறது. கெத்செமனே தோட்டத்தில் அபிஷேகம் அவரைவிட்டு விலகினது. உங்களுக்குத் தெரியும் பாவியாக மரிக்க வேண்டும். தம்முடைய பாவத்திற்காக அல்ல, என்னுடைய, உங்களுடைய பாவங்களுக்காக அவர் பாவியாக மரித்தார். என்னுடைய பாவங்ளை ஏற்றுக்கொண்டதினிமித்தம் *அன்பு இன்னதென்று விளங்கப்பண்ணினார்.*


*இது சூரிய உதயம் 65-0418M*

"கெத்செமனே தோட்டத்தில் அவருக்குள் இருந்த ஆவி எடுக்கப்பட்டு விட்டது. அவர் ஒரு மனிதனாக மரிக்க வேண்டியிருந்தது. அவர் அப்படிச் செய்ய தேவையில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நண்பர்களே, அவர் தேவன். தேவன் அந்த மாமிச சரீரத்தை அபிஷேகித்தார். ஆனால் அது அவருக்கு அவசியமில்லை. அவர் அங்கே தேவனாகவே சென்றிருந்தால், அந்த வகையான மரணத்தை அவர் ருசிபார்த்திருக்க முடியாது. தேவனைக் கொல்ல முடியாது.

# கல்வாரி சிலுவையில் இயேசு

*1 யோவான் 3:16*

*அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்*





*(தேவன் திரைநீக்கப்படுதல் 64-0614M)*

சிலுவையில் மீட்பின் கிரியையைச் செய்து முடிக்கும் பொருட்டு, தேவன் இயேசுவில் திரைமறைக்கப்பட்டிருந்தார். ஆவியாகிய தேவன் மரிக்க முடியாது. அவர் நித்தியமானவர். எனவே அவர் ஒரு வேடம் அணிந்து மரணத்தின் பாகத்தை ஏற்று நடிக்க வேண்டியதாயிருந்தது. அவர் நிச்சயம் மரித்தார். ஆனால் அவருடைய தேவனுடைய உருவில் அவ்வாறு செய்யமுடியவில்லை. அவர் குமாரனுடைய உருவில், பூமியில் மனுஷகுமாரனாக அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது.

*(ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம்/ 62-0724)*

"ஒரு பொருள் சாவதன் மூலமே நாம் உயிர் வாழமுடியும். நாம் ஆகாரம் உண்பதால் உயிர் வாழ்கின்றோம் இயற்கையில் உயிர் வாழ ஒரு பொருள் சாவதின் மேல் நாம் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இருக்குமானால், ஆவிக்குரிய விதத்தில் நாம் உயிர் வாழ ஏதாவதொன்று ஆவிக்குரிய விதத்தில் மரிக்க வேண்டியது அவசியம் அல்லவா? எனவே தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டு, நாம் வாழ வேண்டுமென்பதற்காக அவர் மரித்தார்."

# கல்வாரி சிலுவையில் இயேசு




அடையாளம் 64-0308)

"நாம் அவரைத் தொட்டு உணரும் படிக்கு தேவன் தம்மை மனித உருவில் அடையாளம் காண்பித்தார். "தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்."

1தீமோத்தேயு 3:16

மத்தேயு 27:46

ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மாற்கு 15:37

இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்.

# இயேசு காவலிலுள்ள ஆவிகளிடத்திற்குச் சென்றார்



1பேதுரு 3:18-20

ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்.


அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் காக்கப்பட்டார்கள்.

# இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களின் வரைபடம்

பிதா கெத்செமனேயில் அவர் சரீரத்தை விட்டு விலகினார்

பிதா யோர்தான் நதியில் அவர் மேல் வந்திறங்கினார்

*கல்வாரியில் இயேசு ஆவியை விட்டார்*




இயேசுவின் ஆத்துமா பாதாளத்திற்குச் சென்றது. அங்குள்ள ஆத்துமாக்களுக்கு பிரசங்கம் பண்ணப்பட்டது.

இயேசுவின் சரீரம் கல்லறைக்குச் சென்றது

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்



கர்த்தத்துவம் நிறைவேறிவிட்டது

யோவான் 20:16-18

இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.
இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.
மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

# கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரம்



இயேசு, நாற்பது நாட்கள் எம்மாவிலும், மற்றும் எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்குத் தமது மகிமையடைந்த சரீரத்தில் தரிசனமானார்.

அவருடைய மகிமையின் சரீரமானது தோன்றவும், மறையவும், புசிக்கவும் செய்யும். ஆனால் ஒரு போதும் மரிக்கமுடியாது.

சந்தேகப்படுகிற தோமா யோவான் 20:24-29

# கிறிஸ்துவின் பரமேறுதல்



அப்போஸ்தலர் 1:9-12

இவைகளை அவர் சொசொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று:

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வு நாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத்திரும்பிப்போனார்கள்.

# இப்பொழுது தேவனுடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்.

கிறிஸ்துவின்
ஆசாரியத்துவம்
நிறைவேறிவிட்டது.
இப்பொழுது நம்முடைய
பெலவீனங்களைக்குறித்து
நமக்காக பரிதபிக்கக்
கூடிய பிரதான
ஆசாரியராய்
இருக்கிறார்...



*வெளிப்படுத்தல் 3:21*

*நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.*

*மாற்கு 12:36*

*நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே.*

# கிறிஸ்துவின் ஆவி திருப்பி வருவது



வாக்குத்தத்தம் பத்து நாட்களுக்குப் பின்பு
நிறைவேறினது



லூக்கா 24:49

என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

அப்போஸ்தலர் 1:8

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

அப்போஸ்தலர் 2:1-4

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.


அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

# பரிசுத்த ஆவியானவர் யார்?



யோவான் 14:16-20


நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.



கலாத்தியர் 4:6

எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

# பரிசுத்த ஆவியானவர் யார்?



1கொரிந்தியர் 3:16
நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

கொலோசெயர் 1:26,27
உங்கள்பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்.
புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

# பவுல் இயேசுவைச் சந்தித்தல்





அக்கினிஸ்தம்பத்திற்குத்
திரும்பி சென்றார்

*அப்போஸ்தலர் 9:1-5*

*சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.*

*அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.*


கி.பி 53லிருந்து இக்காலம் வரை
ஏழு நட்சத்திரங்களும், ஏழு குத்துவிளக்குகளும்
= ஏழு தூதர்களும், ஏழு சபைகளும்
வெளிப்படுத்தல் 1:20-புறஜாதிமணவாட்டியின் காலம்
எபேசு கிபி 53-170
சிமிர்னா கிபி 170-312
பெர்கமு கிபி 312-606
தியத்தீரா கிபி 606-1520
சர்தை கிபி 1520-1750
பிலதெல்பியா கிபி 1750-1906
லவோதிக்கேயா கிபி 1906- Rapture
millevomedia.com

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை: எடுத்துக்கொள்ளப்படுதல்



- மாம்சத்தில் அவதாரம் எடுத்த தேவன் தம்முடைய மணவாட்டிக்காக ஏழு
- சபைக்காலங்களிலிருந்து திரும்ப வருகிறார்.
- வருகையின் மூன்று கட்டங்கள் =
- ஆரவாரம், சத்தம், எக்காளம்

*(1 தெச 4:16-18)*

- இரவில் திருடன் வருகிறது போல இருக்கும்.
- ஒரு இமைப்பொழுதிலே நடந்துவிடும்.

*...மல்கியா 4ல் சொல்லப்பட்ட கடைசிகால ஊழியம் மற்றும் வெளிப்படுத்தல் 10:6; லூக்கா 17:30ல் சொல்லப்பட்ட எடுத்துக்கொள்ளப்படுதலுக்கான விசுவாசத்தை அளிக்கும் செய்தி*

# வேதாகமத்திலுள்ள 6 எடுத்துக்கொள்ளப்படுதல்கள்

பழைய ஏற்பாட்டிலுள்ள மூன்று எடுத்துக்கொள்ளப்படுதல்கள்

ஏனோக்கு - ஆதியாகமம் 5:24
எலியா - 2 இராஜாக்கள் 2:1
பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் - மத்தேயு 27:50-53

புதிய ஏற்பாட்டிலுள்ள மூன்று எடுத்துக்கொள்ளப்படுதல்கள்

கர்த்தராகிய இயேசு - அப்போஸ்தலர் 1:9
புறஜாதி மணவாட்டி - 1 தெசலோனிக்கேயர் 4:16,17
இரண்டு சாட்சிகள் - வெளிப்படுத்தல் 11:12

எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்த பின்பு, உபத்திரவ காலத்தின்போது, கிறிஸ்து இரண்டு சாட்சிகளை (மோசேயும், எலியாவும்) அனுப்பி, 1,44,000 யூதர்களைப் பாவநிவர்த்தி பண்டிகைக்கு அழைப்பார்.

*வெளிப்படுத்தல் 11:3-6*

என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். பூலோகத்தின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குதண்டுகளும் இவர்களே. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும். அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.





# கிறிஸ்துவின் மூன்றாம் வருகை

வெளிப்படுத்தல் 19:11-16

பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.
அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.
இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.
பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.
புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.
ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.
அர்மகெதோன் அக்கினி பூமியை ஆயிரவருட ஆளுகைக்கு ஆயத்தப்படுத்துகிறது.

# கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் ஆயிரவருடம் ஆளுகை செய்கிறார்கள்

## - 1000 வருடங்கள் பூமியில் தேனிலவு -


கிறிஸ்து தாவீதின் குமாரன் என்ற பாகத்தை நிறைவேற்றுகிறார்.



பிந்தின ஆதாமுக்கும், அவருடைய மணவாட்டிக்கும் ஏதேன் தோட்டம் திருப்பி அளிக்கப்படுகிறது.

# புதிய வானமும் புதிய பூமியும்

வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பு, சாத்தானின் அழிவு இவைகளுக்குப்பின்பு புதிய வானமும் புதிய பூமியும் தோன்றுகிறது...



<u>*வெளிப்படுத்தல் 21:1-4*</u>

பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது

# குமாரத்துவம் என்ற பதவிக்கு முடிவு உண்டாகும்

1 கொரிந்தியர் 15:24-28

அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.

எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது.

பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.

சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது.

சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

ரோமர் 8:29

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

# தீர்க்கதரிசனத்தின் கால வரிசை



தேவன்



| மேசியா | தீர்க்கதரிசி | இரட்சகர் | ஆசாரியர் | ராஜா | நியாதிபதி |
|---|---|---|---|---|---|
| பெத்லேகேமில் முன்னனை பிறப்பு | யோர்தான் நதியில் ஞானஸ்நானம் | கல்வாரி சிலுவையில் | சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார் | ஆயிரவருட ஆளுகையில் தாவீதின் சிங்காசனம் | வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு |

தேவன், அவருடைய தன்மைகள் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றுகிறார்

# ஒரே தேவனுடைய மூன்று யுகங்கள்

(ஒரே தேவனின் 3 பதவிகள், 3 தோற்றங்கள் என்றும் அறியலாம். ஆனால் ஒருபோதும் மூன்று ஆட்களல்ல)

| பிதாத்துவம் | குமாரத்துவம் | பரிசுத்த ஆவி |
| --- | --- | --- |
| நம்மேல் இருக்கும் தேவன் | நம்முடன் இருக்கும் தேவன் | நமக்குள் இருக்கும் தேவன் |
| கர்த்தர் | இயேசு | கிறிஸ்து |
| மோசேக்கு அக்கினி ஸ்தம்பம் | மானிட சரீரம் | பெந்தேகோஸ்தே நாளில் அக்கினி ஸ்தம்பம் |

## ஒரே தேவன்



தேவன் "என் மார்பி" (en morphe) = ஒரே தேவன் தமது "முகமூடியை" (masks) மாற்றிக் கொள்ளுகிறார்


உதாரணம்: **ஒரே மனிதன்**

தகப்பன் மகன் கணவன் பாட்டனார்

என்ற ஸ்தானங்களை வகிக்கின்றான்

# ஒரே தேவனின்

## " வித்தியாசமான தோற்றங்கள் "



மோசே, பேதுரு மற்றும் பவுலுக்கு "அக்கினி ஸ்தம்பம்"

பகலில் இஸ்ரவேலருக்கு "மேகஸ்தம்பம்"

ஆபிரகாமுக்கு "மெல்கிசேதேக்கு"

வானத்திலிருந்திறங்கின மன்னா" ஜீவ அப்பம்"

மரியாளுக்கு மாம்சத்தில் வந்த "இயேசு கிறிஸ்து"

"வனாந்திரத்திலிருந்த "கன்மலை"

சுகமளிக்கும் அடையாளமான "வெண்கல சர்ப்பம்"

# Calvary Tabernacle

8/10, Kalainger Street
Valasaravakkam
Chennai - 600 087
Tamilnadu, SouthIndia
Ph: 044-42647849
E-mail: samuelappadurai@gmail.com
Website: www.calvarytabernacle.in